# சீரிய வேலை

90

ஓர் நல்ல உலகம் இங்கு ஆரம்பிக்கின்றது

நீங்கள் சமுதாய நீதி, நியாயத்திற்காக தொழில் செய்கின்றீர்கள்.




ஆசிய, பசுவிக் நாட்டிற்கான ச.தொ.தாபனத்தின் பிராந்திய அலுவலகம்
ஐ.நா. சபை கட்டிடம்
ராஜ்தர்மன் நோக் அவனியு
பாங்கொக் - 10200,
தாய்லாந்து.

தொ.பே. இல - + 66 22 881234
தொலை நகரி - + 66 22883062

ஈ மெயில் - BANGKOK@ilo.org
www.ilo.org/asia


Designed & Printed by: General Printing Services (Pvt) Ltd. Tel: 011-2385945

சர்வதேச
தொழில்
நிறுவனம்

# சர்வதேச தொழில் தாபனம்

90 வருடகாலமாக சர்வதேச தொழில் தாபனம் சமுதாய நீதி, நியாயத்திற்காக உழைக்கின்றது.





ஆசியாவின்
**கௌரவமான தொழில்**
தசாப்த்தம்

2006
2015

# சர்வதேச தொழில் தாபனம்

சர்வதேச தொழில் தாபனம் (ச.தொ.தா) மனிதவள மற்றும் தொழிலாளர் உரிமைகளை மேன்மைபடுத்தவும் சமுதாய நீதி, நியாயத்தை வளப்படுத்தவும் சர்வதேச மட்டத்தில் அங்கீகாரம் பெற்ற தாபனமாகும். அதன் முக்கியமான குறிக்கோளாக சீரிய வேலையைப் பெற்றுத்தரவும் சகல தொழிலாளர்களும் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும், பாதுகாப்பாகவும் மற்றும் மனித அபிமானத்துடனும் தொழில் செய்ய ஏற்படுத்திக் கொடுப்பதுமாகும்.

சீரிய வேலையை பெற்றுக் கொடுக்க ச.தொ.தாபனம் நான்கு முன்னுரிமை உபாயங்களை முன்வைத்துள்ளது.
அவையாவன:

- வேலையில் உரிமையையும் தொழில் தரத்தையும் ஊக்குவிப்பதோடு அடிப்படையான கோட்பாடுகளை அமைத்துக் கொடுப்பது.
- சீரிய வேலையைப் பெற பெண்களுக்கும் ஆண்களுக்கும் அதிகமான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பது.
- சமூகக்காப்பினை எல்லாவகையிலும் மேம்படுத்திக் கொடுத்து பாதுகாப்பது.
- சமூகக்காப்பு நல் உறவினை ஏற்படுத்தி தொழிலாளர்கள், தொழில் வழங்குனர் மற்றும் அரசாங்கங்களுடன் ஒற்றுமையாக சக்தி வாய்ந்த சம்பந்தத்தை ஏற்படுத்திக் கொடுப்பது.

ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய குறிக்கோளாக தொழிலாளர்கள், தொழில் வழங்குனர் மற்றும் அரசாங்கங்களுக்கிடையிலான முத்தரப்பு கட்டமைப்பை சர்வதேச தொழில் தாபனம் ஏற்படுத்தியிருப்பது இங்கு குறிப்பிடப்படவேண்டிய ஓர் அம்சமாவதோடு அதனால் முத்தரப்பினரும் சம பங்காளிகளாக கணிக்கப்படுவர் என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

## ச.தொ.தாபனத்தின் சரித்திர முக்கிய நடவடிக்கைகள்.

| | |
|---|---|
| 1919 | ச.தொ.தாபனம் முதல் உலக யுத்தத்தின் பின்னால் "வேசைலீஸ்" என்ற ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கைக்கு அமைய ஆரம்பிக்கப்பட்டது. |
| 1926 | சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் (ILC) தொழில் நியதியின் அடிப்படையில் தொழிலாளர்களை நடத்துவதை கண்காணிக்கும் அங்கத்தை வடிவமைத்தது. |
| 1944 | "பிலடெல்பியா" பிரகடனம் ச.தொ.தாபனத்தின் முக்கிய கோட்பாடுகளை இணைத்த அங்கமாக பிரகடனப்படுத்தப்பட்டது. |
| 1946 | ஐக்கிய நாடுகள் சபையின் புதிதாக இணைக்கப்பட்ட முதல் அங்கீகரிக்கப்பட்ட தாபனமாக சர்வதேச தொழில் தாபனம் இணைக்கப்பட்டது. |
| 1969 | சமுதாய நீதி, நியாய மேம்பாட்டிற்காக உழைத்ததற்கு சர்வதேச தொழில் தாபனத்திற்கு சமாதான "நோபல் விருது" கிடைக்கப்பெற்றது. |
| 1998 | சுவீகார பிரகடனத்தையும் அடிப்படை மூலதனத்தையும் ஏற்றுக் கொள்வதோடு வேலை செய்யும் உரிமைகளையும் அங்கீகரிக்கின்றது. |
| 1999 | சர்வதேச தொழில் தாபனம் சீரிய வேலையைக் கருத்திற் கொண்டு சரித்திரவாயிலான கட்டளைகளை செயற்படுத்த தன்னை ஈடுபடுத்துகின்றது. |
| 2004 | "ஒரு நேர்மையான உலகமயமாக்கலினால் எல்லோருக்கும் சந்தர்ப்பம் வழங்குகின்றது" என்ற உலக கமிசனின் அறிக்கையை சமுதாயத்திற்கு அளித்தது. |
| 2006 | சர்வதேச தொழில் தாபனத்தின் ஆசிய மற்றும் பசுவிக் கண்டங்களின் அங்கத்தினர்கள் ஆசியாவில் சீரிய வேலையின் பத்தாண்டுத் திட்டத்தினை செயற்பட உறுதியளித்ததோடு 2015ம் ஆண்டிற்கு முன் அதனை நிறைவேற்ற உறுதியெடுத்தது. |
| 2008 | சர்வதேச தொழில் தாபனத்தின் கூட்டத்தில் சமுதாய நீதி, நியாயத்திற்காகவும் மற்றும் உலக மயமாக்கலின் சாதாரண நிலைப்பாட்டினை ஏற்படுத்தவும் அதனால் ஏற்படும் சவால்களிற்கு முகம் கொடுத்து சீரிய வேலையை பெற வழி செய்யவும் சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் (ILC) இணங்கியது. |

## 90 வருடகாலமாக சர்வதேச தொழில் தாபனம் சமுதாய நீதி, நியாயத்திற்காக உழைக்கின்றது.

"ச.தொ.தாபனத்தின் அதி சக்திவாய்ந்த தன்மை அதன் 90 வருடகாலமாக தொடர்ச்சியாக சமூகக்காப்பு, நீதி, நியாயங்களை தக்க வைத்திருப்பதோடு இன்றுவரை அதனை செவ்வனே நடத்தி வருவதாகும். தொழில் ஒருவரின் பல அனுபவங்களில் ஒன்றாவதோடு ஒவ்வொருவரும் சீரிய வேலையை தம் வாழ்நாளில் பெற்றுச் செய்ய வேண்டும் என்ற ஆவலாய் உள்ளனர்".

சஜிகோ யமமோடோ
பிராந்திய பணிப்பாளர், ஆசிய பசுவிக் ச.தொ.தா பிராந்திய அலுவலகம்.

1919ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இத்தாபனம் அதன் 90வது ஆண்டு நிறைவினை 2009ம் ஆண்டில் அதன் அங்கத்தினர்களுடன் கொண்டாடுகின்றது. ச.தொ.தாபனம் மிகப் பழமையான ஐக்கிய நாடுகள் சபையின் ஓர் அங்கமாக இயங்குவதோடு 1919ம் ஆண்டின் "வேசைலீஸ்" உடன்படிக்கையின் வெளிப்பாடுகளையும் வழி நடாத்துகின்றது..

ஏப்ரல் 21ம் திகதி முதல் 28ம் திகதி 200து பல உயர் மட்ட நடவடிக்கைகளை எடுக்க உத்தேசித்துள்ளது. (ச.தொ.தாபன9ம் வருட வாரத்தில் ஆசிய மற்றும் பசுவிக் கண்டங்களிலும் இதர பிராந்தியங்களிலும் சர்வதேச தொழில் தாபனம் அதன் 90வது ஆண்டின் நிறைவைக் குறிதம் அதன் முதற் கூட்டத்தை 1919ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ம் திகதி நடத்தியது. அதன் விளைவாக இவ் நடவடிக்கைகளை எடுக்கின்றது). இந்த 90 வருட வேலைத்திட்டங்களை சமூகக்காப்பு நீதி நெறியினை உள்ளடக்கிய தலைப்பாக நடத்துவதோடு ச. தொ. தாபனத்தின் முற்தரப்பு அங்கத்துவத்தை ஒன்றிணைத்த செயற்பாடுகளை நடத்த உத்தேசித்துள்ளது.

தனிப்பட்ட ஒவ்வொரு நாட்டிலும் இந்நிகழ்ச்சிகள் அந்நாட்டைச் சார்ந்த விதத்தில் வெவ்வேறு முறைகளில் நடத்தப்படலாம். ஆனால் அதன் முக்கிய நிகழ்ச்சிகள் ஒளிவாய்ந்த சர்வதேச தொழில் தாபனத்தின் கொள்கைகளை எடுத்துக் காட்டும் நிகழ்ச்சியாக பிரதிபலிப்பதோடு அதனை மேம்படுத்திக் காட்டவும் அதே நேரத்தில் அவர்கள் அந்நாட்டில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டவும் சீரிய வேலையை நடத்தவும் உலகமயமாக்கலின் பெறுபேறுகளை கூறவும் மற்றும் சமூக முன்னேற்ற வழிவகைகளை உண்டு பண்ணி அதனை நடத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேசிய மட்டத்தில் மேன் நிலையில் தொழில் செயலமர்வுகளை நடத்தவும், கூட்டங்களையும், கண்காட்சிகளையும், கலாச்சார நடவடிக்கைகளையும் ஒரு சிறு மரதன் ஓட்டத்தையும், வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் நிகழ்ச்சிகளை நடத்தவும் பத்திரிக்கை வாயிலாக இது பற்றிய நிகழ்வுகளை பிரசுரிக்கவும் கட்டுரைப் போட்டி, படக் கண்காட்சிகளை நடத்தவும், சித்திரப் போட்டிகளை ஏற்படுத்தவும் இதனை ஒட்டிய முத்திரை ஒன்றினை வெளியிட்டு அந்நாடுகளில் ச.தொ.தாபனத்தின் 90 ஆண்டின் நிகழ்ச்சியினை தக்கவைக்கும் என எதிர்பார்க்கின்றது.

